**<u>உசிலம்பட்டி நகராட்சி மன்றம்</u>**
**<u>நகர்மன்றக்கூட்டம்</u>**
**<u>நாள். 28.10.2020 புதன்கிழமை நேரம் : காலை 10.00 மணி</u>**

---

## நகர்மன்றக்கூட்டம் : நாள். 28.10.2020

**<u>மன்றப்பொருள்:-1</u>**

அரசாணை எண்.298, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 02.09.2020 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.8763/2020/ஆர்–2, நாள். 29.09.2020–இன்படியும், பொது ஊரடங்கு செயல்படாத குத்தகை இனங்களுக்கு 01.04.2020 முதல் 31.05.2020 வரை உள்ள காலத்திற்கு உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படாத கடைகள் / வரியில்லா இனங்களுக்கு வாடகைத்தொகையினை செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்தும், மேலும், கேட்பு பட்டியல் தயார் செய்து உரிய அலுவலர்களை கொண்டு குழு அமைத்து ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் நகராட்சி அலுவலர்களைக்கொண்டு குழு அமைத்து ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்து உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட குத்தகை இனங்கள் மற்றும் பிற இனங்களான கடைகள் மற்றும் ஸ்டால்கள் கொண்ட இனங்களின் பட்டியல்படி கேட்பினை தள்ளுபடி செய்ய மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

1.4.2020 முதல் 31.05.2020 வரை உள்ள குத்தகை இனங்கள், கடைகள் மற்றும் ஸ்டால்கள் கேட்பினை தள்ளுபடி செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 999/2013/அ1)

**தீர்மானம் எண்.1** **நாள். 28.10.2020**

**<u>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

(ஒம்) ப. பாலமுருகன்,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்(பொ)
உசிலம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்
உசிலம்பட்டி நகராட்சி.

**<u>மன்றப்பொருள்: 2</u>**

உசிலம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான ஈப்பு வாகனம் TN.58 AW-2747–க்கு ஆயில் சர்வீஸ் செயய்யப்பட்ட பின்னர் 35000km ஓடியுள்ளதால் தற்போது ஆயில் சர்வீஸ், ஏசி பழுது நீக்கம், பவர்வின்டோ பழுது நிக்கம், வாட்டர் சர்வீஸ், பிரேக் மற்றும் வயரிங் சரிபார்த்தல் போன்ற பழுது வேலைகளை மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினத்தொகை ரூ. 90,000/–ஐ குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). அவசரஅவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதி பெற்று M/s. TV Sundaram Iyengar and sons private Ltd., Kappalur நிறுவனம் மூலம் பழுது வேலைகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2887/2013/எச்.1)

---

**<u>மன்றப்பொருள்: 3</u>**

மாவட்ட அலுவலர், தீயணைப்பு மீட்பு துறை, அவர்களின் ஆய்வு அறிக்கை ந.க.எண். 7871/அ1/2018–4, நாள். 16.09.2020–இன்படி உசிலம்பட்டி நகராட்சி அலுவலகத்தில் தீயணைப்பான்கள் $Co_2$ 2kg = 2 Nos புதிதாக வைத்து பராமரிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. அதன்படி 01.10.2020–இல் 1 எண்ணம் தீயணைப்பின் கருவி தீயணைப்பு அலுவலர், உசிலம்பட்டி திரு. எஸ்.சுரேந்திரன் என்பவரால் புதிதாக வாங்கப்பட்டு இந்நகராட்சியில் ஒப்படைப்பு செய்யப்பட்டது. மேற்படி கருவியானது கணினி அறையில் வைக்கப்பட்டுள்ளது. தீயணைப்பான் கருவிக்கான செலவினத்தொகை ரூ. 2150/– ஆகும். அதற்கான பட்டியல் தொகை ரூ. 2150–ற்கான காசோலையை திரு.எஸ்.சுரேந்திரன் தீயணைப்பு அலுவலர் உசிலம்பட்டி என்பவரது பெயரிலேயே வழங்கலாம் மன்ற அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

---

**<u>மன்றப்பொருள்: 4</u>**

இந்நகராட்சியில் பணிபுரியும் சீருடைப்பணியாளர் துப்புரவு பணியாளர்கள், துப்புரவ பணி மேற்பார்வையாளர்கள், ஓட்டுநர்கள், அலுவலக உதவியாளர்கள் மற்றும் ஆரம்ப சுகாதார துப்புரவு பணியாளர்கள் ஆகியோர்களுக்கு 2020–2021–ஆம் ஆண்டிற்கு சீருடைகள் வாங்குவதற்கு செலவினம் மற்றும் தையல் கூலி வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 2,00,000/–த்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்)–த்திற்கு அரசுத்துறை நிறுவனத்தில் கொள்முதல்செய்து கொள்ளவும், உத்தேச செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

1). மன்றம் அனுமதிக்கலாம்

2). சீருடைகள் அவசர அவசியம் கருதி செலவுகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2533/2013/எச்.1)

---

**<u>மன்றப்பொருள்: 5</u>**

தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் உசிலம்பட்டி நகராட்சி திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நகராட்சியாக (Open defecation Free) அறிவிக்கப்பட்டு தொடர்ந்து அத்தகைய நிலையிலேயே கடைபிடிக்கப்பட்டு வருகிறது. தற்போது அதன் அடுத்த நிலையான (ODF+) சான்று பெறுவதற்கு இந்நகராட்சி பகுதியில் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலை தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது என்பதற்கு சுய உறுதிமொழி சான்று வழங்கவும் இப்பொருள் தொடர்பாக பொதுமக்களின் ஆட்சேபனைகள் மற்றும் கருத்துக்களை பெற நாளிதழில் விளம்பரம் செய்யவும் அதற்காகும் உத்தேச செலவினத்தொகைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

சுய உறுதிமொழி சான்றுக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண். 1262/2017/எச்.1)

---

**<u>மன்றப்பொருள்: 6</u>**

உசிலம்பட்டி நகராட்சியின் அலுவலக நடைமுறைகள் அனைத்தும் மின் ஆளுமை E-Governance திட்டத்தின்கீழ் நடைபெற்று வருகிறது. அதற்குரிய ணைய கட்டணத்தொகை 1.10.2019 முதல் 31.03.2020 வரை செலுத்த வேண்டியிருப்பதால் ரூ. 96,590/– (ரூபாய் தொன்னூற்று ஆராயிரத்து ஐநூற்று தொன்னூறு மட்டும்) வருவாய் நிதியிலிருந்து செலுத்தலாம் மன்றத்தின் அனுமதிக்கு

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). சூமற்படி இணைய கட்டணத்தின் அவசர அவசியம் கருதி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.

(ந.க.எண். 1672/பி1/2020

---

**<u>மன்றப்பொருள்: 7</u>**

இந்நகராட்சி கணினி வசூல் மையத்திற்கு சொத்துவரி ரசீது, குடிநீர் கட்டண ரசீது மற்றும் இதர வரி இனங்களுக்கு வழங்கக்கூடிய ரசீது எண்.1 முதல் 40000 வரை அச்சிட்டு வாங்குவதற்கு ஆகும் உத்தேச மதிப்புத்தொகை ரூ. 50,000/– த்திற்கு மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

1). மன்றம் அனுமதிக்கலாம்.

2)..சொத்துவரி ரசீது, குடிநீர் வரி ரசீது மற்றும் இதர வரி இனங்களுக்கு வழங்கக்கூடிய ரசீதின் அவசர அவசியம் கருதி வாங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 957/2014/எச்.1

---

**<u>மன்றப்பொருள்: 8</u>**

உசிலம்பட்டி நகராட்சி பொதுச்சுகாதார பிரிவு வாகன எண். டி.என்.58 ஏ.டபுள்யூ.3247 (டிப்பர் லாரி) முன்புற கண்ணாடி உடைந்து விட்டதால் மேற்படி பழுது பணியை பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி M/s. தீப்தி ஏஜென்சிஸ், மதுரை நிறுவனம் மூலம் மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினத்தொகை ரூ. 15,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

1). மன்றம் அனுமதிக்கலாம்.
2).பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதி பெற்று உடன் பழுது பணிகள் பார்க்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 2217/2016/எச்.1)

---

<u>மன்றப்பொருள்: 9</u>

இந்நகராட்சி பேருந்து நிலையத்திற்குள் உள்ள கடை எண்.13,36,72 மற்றும் ஆடுவதைக்கூட ஏலம் விடுவதற்கு மாலை முரசு நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு ரூ. 13650/—யை Bright adventising வழங்க மன்றம் பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
உசிலம்பட்டி நகராட்சி.